ஜனவிநோதினி.

.1. ஜனுவரி ௴ 1871. புஸ்த. II.

அர்த்தசாஸ்திரம்.

முயற்சிக்கநுகூலமான விஷயங்கள்.

இதுவரையும் முயற்சி இன்னதென்றும், அதன் பாகுபாடு ...யென்றும், அதனுல் வரும் நன்மைகள் இவையென்றும் ...ண்டோம். இனி முயற்சிசெய்வதற்கு ஒருவனை ஏவுகின்ற ...க்கியமான விஷயங்கள் எவையென்று பார்ப்போம்.

தேசங்களின் ...னைக் கவனிக்கும்போது, பெரும்பாலும் ரா...ாங்கத்தின் இயல்புக்குத்தக்கபடி ஜனங்களுடைய முயற்சியு... ...ருக்கிறதென்று சொல்லத்தக்கது. ...த்தமாக: குடிகளுக் ...் கொஞ்சமென்கிலும் சுவாதீனங்கொடாமல் ஒடுக்கி ஆளு ...ற்ற கொடுங்கோல் அரசரின் கீழிருக்கும் துருக்கர் முதலிய ...ாதியார் சோம்பலில் பேர்போனவர்களாயிருக்கிறார்கள். பிரஜை ...ளுடைய சுவாதந்திரியத்தைப் பேணி நடத்துகின்ற செங்கோல் ...ரசாட்சியின்கீழ் வாழும் அங்கிலேயர், அமெரிக்கர், ஆலந்தர் ...ுதலிய பல ஜாதியார் பெரும்பாலும் முயற்சியிற் சிறந்திருக்கி ...ார்கள். மேலும் ஒரு ஜாதியாருக்குள்ளேயே கலகமுஞ் சண்டை ...முண்டாகி, சொத்துகள் காபந்துபடாமல் குழப்பம் நேரிட்டிருக் ...ின்ற காலத்தைப்பார்க்கிலும் அமைதலும் ஐக்கியமுமுண்டாகி, ...வரவர் சொத்து அவரவருக்கேயென்று நிச்சயம் பிறந்திருக்கும் ...லத்தில் முயற்சி பெருத்த அதிகரிக்கின்றது. இதை யோசிக்கும் ...பாது ராஜ்ஜியத்தின் க்ஷேமலாபத்துக்கும், ஜனங்களுடைய சீர் ...ருவாகத்துக்கும் தக்கபடி முயற்சியானது அதிகரிக்கிறது அல் ...து குறைகிறதென்று தெளிவாகத் தோன்றும். அப்படியானுல்

முயற்சி அதிகரிக்கும்படி ஜனங்கள் எப்படிப்பட்ட ஸ்திதியி இருக்கவேண்டுமென்று கேட்கில்:

முதலாவது: ஒவ்வொருவரும் அவரவர் முயற்சியால் வரு பலனை அவரவர் தடையின்றி அநுபவிக்கத்தக்க ஸ்திதியிலிருக் வேண்டும்.

இரண்டாவது: முயற்சிசெய்யாமல் சோம்பலாயிருந்து வீ காலம் போக்குகிறவர்கள், தங்கள் சோம்பலால் விளையும் கே டை அநுபவித்துத் தீரவேண்டியதேயன்றி வேறுவழியாய்ச் அநுபவிக்க இடமிருக்கப்படாது.

மூன்றாவது: ஜனங்களுக்குள் அறிவு பெருகுவதற்கு அநுகூ மான வழிவகைகள் அநேகமிருக்கவேண்டும். முயற்சிசெய்யு விதம் இப்படியென்றும், அதனால் வரும் பலன் இன்னதென்று ஒருவன் அறியாவிட்டால் அவன் முயற்சிசெய்கிறதெப்படி? மூட ந்தகாரம் நிறைந்த இடங்களில் வசிக்கும் காட்டுஜனங்களுக்கு முயற்சி குன்றிப்போயிருப்பதற்குக் காரணமென்ன? முயற்சி செய்ய இடமில்லையென்றா? தேகபலமில்லையென்றா? அல்லது முயற்சிக்கு அவசியமில்லையென்றா? இல்லை. அறியாமையெ னும் ஒரே காரணத்தினாலேதான் அவர்களுக்குள் முயற்சி கு றிப்போயிருக்கிறது. இப்பொழுது அப்படிப்பட்ட பல இட களில் அந்நியதேசத்தாரால் அறிவு விர்த்திக்கு அநுகூலமுன டானதோடு, அவர்கள் முயற்சிசெய்ய ஆரம்பித்து அத சௌக்கியமும் செல்வமும் பெற்று வாழுகிறார்கள். இதனால் தேசத்திலும் முயற்சி அதிகரிப்பதற்கு அறிவு அவசியம் என்ற றது. அறிவாளி தான் எடுத்தகாரியத்தை அறிவீனனைப்பார்க் லும் அதிகத் திறமையாயும் யுக்தியாயுஞ் செய்து முடிக்கிறதுமா திரமல்ல, அதிக முயற்சியுள்ளவனாயுமிருக்கிறான்.

காரியம் இப்படியிருப்பதால், மேற்கண்டபிரகாரம் ஜனங்கள் முயற்சிக்கு அநுகூலமான ஸ்திதியில் நிலைத்து வாழ்ந்திருப்பதற்கு தேசத்தில் நியாயமான சட்டங்களும், அவற்றை நிஷ்பக்ஷபா மாய் நிறைவேற்றுகிற நீதியுள்ள துரைத்தனமும் இருக்கவேண் டியது அவசரமென்று ஏற்படுகிறது. சட்டம் நியாயமற்றதெ னால், ஜனங்கள் ஒடுக்கப்பட்டுத் துன்புறுவார்கள். சட்டம் நிய யமாயிருந்தும் அதிகாரிகள் அதின்படி செய்யாமல் அநீதின நடப்பிப்பார்களென்றால், பிரஜைகள் நம்பிக்கையற்று, சீர்கெட்

மிழந்துபோவார்கள். ஆதலால் ஜனங்கள் நன்னிலைமையிலி
ந்து, நன்முயற்சிசெய்து, சுகசெல்வ ஜீவியாய் வாழ்வதற்கு
க்கிய அநுகூலமான பிரமாணங்கள் மூன்றையும் முறையே
திப்போமாக.

முதலாவது: ஒவ்வொருவருக்கும் தம்தம் முயற்சியால் வரும்
ன் முழுமையும் தாமே அநுபவிக்க இடமிருக்கவேண்டும்.

இவ்விதி நிர்ாடங்கமாய் நிறைவேறுவதற்கு இரண்டுகாரி
ங்கள் அவசியம். அவை எவையெனில்: முதலாவது, ஒருவன்
ாயமாய்ச் சம்பாதிக்கக்கூடியதேதேதுண்டோ அதெல்லாம்
வன் சம்பாதித்துக்கொள்ள இடங்கொடுப்பதும்; இரண்டாவது,
வ்வாறு சம்பாதித்த உடைமையை பிறருக்குத் தீங்கின்றி
வன் தன்னிஷ்டப்படி உபயோகப்படுத்த இடம்பெறுவதுங்
ன்.

1. தன்னுற் சம்பாதிக்கக்கூடியதெல்லாம் சம்பாதித்துக்கொள்ள
வ்வொருவருக்கும் இடங்கொடுக்கவேண்டுமென்கிற ஏற்பாடு
ல்லவேண்டுமானல் அதற்கு இரண்டுகாரியங்கள் அவசியம்.
தற்காரியம்: எல்லாப்பொருளும் எல்லாருக்கும் பொதுவென்றி
மல், இன்னின்னது இன்னின்னருக்குச் சொந்தம் என்கிற பாத்
பம் விளங்கும்படி தேசத்திலுள்ள சகல பொருட்களும் பாகிக்
பட்டிருக்கவேண்டும். இரண்டாங்காரியம்: அவரவர் சொத்தின்
ரில் அவரவர்க்குண்டாயிருக்கிற பாத்தியம் விலகிப்போகாமல்
துகாக்கப்படவேண்டும். இவ்விரண்டு காரியங்களும் சீராயி
ந்தால்தான், ஒவ்வொருவரும் தன்தன்னுல் சம்பாதிக்கக்கூடிய
தேதுண்டோ அதெல்லாம் சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற
தலாம் ஏற்பாடு பயன்படும். அவ்வாறே இப்பொழுது நமது
சத்தில் நிலமோ, மரமோ, ஆடோ, மாடோ சகலமும் யாருக்
வது உரிமைபூண்டிருக்கிறதேயன்றி பொதுவென்றில்லை. வழி
போகிற ஒருவன் தன் கண்ணிற்குக் காண்கிற ஒரு பொ
ளை விலைகொடுத்து அல்லது உடையவனுடைய சம்மதத்தின்
ரில் பெறவேண்டுமேயொழிய சும்மா எடுத்துக்கொண்டு
ாகப்படாது. எடுத்தால் திருடனென்று தண்டிக்கப்படுவான்.
து தன்னுடையது, இது பிறனுடையது என்கிற பேதம் ஒவ்வொ
வருக்கும் நன்ருய்த் தெரிந்திருக்கிறது. அதனுல் ஒவ்வொரு
ரும் தன்தன் காரியத்தில் வெகு ஜாக்கிரதையும் விழிப்புமா

யிருக்கிறார்கள். இதுவன்றி எல்லாம் பொதுவென்றிருந்தா "பொதுஅடியான் புழுத்துச்செத்தான்" என்றதுபோல ஒன்று உபயோகப்படாமல் எல்லாம் கெட்டுப்போம்.

அமெரிக்காகண்டத்தின் வடபாகத்தில் ஓரிடத்தில் சுதேசி ளாகிய ஈந்தியர் சுமார் ஐந்நூறு அறுநூறுபேர்வரையுமிருக்கிறா கள். அவர்களெல்லோரும் ஒருகுலச் சனங்களாம். அவர்க வசிக்கும் நாடு, ஐக்கிய சமஸ்தானம் அவ்வளவு விஸ்தீரணமிரு கும். ஆயினும் அந்நிலம் பாகமின்றிச் சமுதாயிருக்கிறதின முழுமையும் பாழாய்க்கிடக்கிறது. அது எல்லாருக்கும் பாத்திய என்றிருக்கிறதினால், உள்ளபடி ஒருவருக்கும் பாத்தியப்படா லும் பலனில்லாமலுமிருக்கிறது. தனித்தனி பாத்தியஸ்தன் இ றிச் சமுதாயமாய்க்கிடக்கிற சகல பொருட்களும் இப்படியே அ பிரயோஜனமாய்ப்போகும். ஆயினும் அந்த மூடஜனங்களுக்கு ஒரு பாத்தியதைமாத்திரம் உண்டு. அவரவர் அம்பும், வில்லு அவற்றால் வேட்டையாடிய பொருளும் அவரவர்க்கேயுரிய மற்றவர்களுக்கு பாத்தியமில்லை. இவ்வளவாவது ஒரு பாத்தி மென்றுவைத்து அதைக் காத்துக்கொண்டுவருகிறதினாலேதா அவர்கள் ஆகாரம் சம்பாதித்து வயிறுபிழைக்க வகை இருக் றது; இல்லையென்றால் அவர்களெல்லாரும் வேட்டையாடக்கூட போகாமல் பட்டினிகிடந்து சாவார்கள். ஆதலால் பொரு களைப் பாகித்து, அவரவர்க்குச் சொந்தமாகக் கொடுத்து, அ தின்மேல் அவர்களுக்குப் பாத்தியதையுண்டாக்கிவைக்கிற ஏ பாட்டினாலே அவரவர் முயற்சிசெய்வதற்கும், அதனால் அன் வஸ்திரமுதலிய பொருட்களைத்தேடி அநுபவித்து வாழ்வதற்கு அநுகூலமுண்டாகிறதென்று காண்கிறோம்.

சொத்துக்களெல்லாம் எவ்வளவு நிச்சயமும் வரையறை மாய்ப் பாகிக்கப்பட்டு ஒருவர்க்கு உரிமையாகிறதோ அவ்வள வும் அநுகூலமாம். ஒவ்வொரு ஆளுக்கும் இன்னின்னது தன்னு டைய சொத்து, தனக்கே உரிமை, தானே அதற்குப் பாத்திய தன் என்கிற நிச்சயமிருந்தால், ஒவ்வொருவரும் தன்தனக்கென் கவலைப்பட்டு அதைக் காப்பாற்றவும் விர்த்திபண்ணவும் முய வார்கள். அதனால் அவரவரே நல்ல பலனடைந்து வாழுகிற மன்றி, தேசமும் செழித்துச் செல்வமுஞ் சிறப்பும் உண்டாகு அஃதின்றிச் சகலமும் சமுதாயமென்றிருந்தால், "யாருக்கு வ

ருந்தோ" என்று ஒருவரும் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படா
ல் சும்மா இருந்துவிடுவார்கள். அதனால் ஒரு தொழிலும் நடவா
ல் காரியமெல்லாங்கெட்டு நாசமாகிறதுமன்றி, தேசமும் பா
கி ஜனங்களும் வறுமைப்பட்டு வருந்துவார்கள். ஆதலால்
தாபரசங்கமமாகிய சகல சொத்துக்களும் பாகிக்கப்பட்டு அவ
ர்க்கென்று தனித்தனி பாத்தியப்படுவது முயற்சிக்கு முக்கிய
நுகூலமாம்.

இரண்டாவதுகாரியம்: பாத்தியம் அழிந்துபோகாமல் காக்
ப்படவேண்டும். ஒரு பொருள் ஒருவனுக்கு எப்படிப் பாத்திய
கிறதென்றால், அவன் அந்தப் பொருளைச் செய்ததினாலாவது,
சய்வித்ததினாலாவது, விலைக்குக் கொண்டதினாலாவது, பரிவர்த்
னையாகப் பெற்றதினாலாவது, தானம் வாங்கினதினாலாவது அவ
னுக்கு அந்தப் பொருளின்மேல் பாத்தியமுண்டாகிறது. அவன்
அதை வைத்து அநுபவிக்கலாம், அல்லது விற்றுப்போடலாம், அல்
து தன்னிஷ்டப்படி எப்படி வேண்டுமோ அப்படி அதைச் செ
துபோடலாம். அதன்பேரில் மற்றவர்களுக்கு யாதொரு வழ
தமில்லை, பேச்சுமில்லை. ஒருவனுடைய பாத்தியத்தில் இன்
னொருவன் எவ்வகையாயாவது தலையிடப்படாது, சங்கடம்
நுவிக்கப்படாது. இவ்வாறு ஒவ்வொருவனுடைய பாத்திய
தக்குங் கேடுவராமல் காத்துக்கொள்வது தேசத்திலுள்ள ஒவ்
வொருவர்பேரிலும் தனித்தனி சுமந்த கடமையாம். இந்தக் கட
மையைப் பிரஜைகள்கூடி சில தேசங்களில் ராஜனென்றொருவ
டைய கையிலும், வேறு தேசங்களில் பிரதிநிதிகள், பிரதானி
ள், நியாயாதிபதிகள், அதிகாரிகள், ஆலோசனைக்கர்த்தாக்கள்
ன்று பலருடைய கையிலும் ஒப்பித்திருக்கிறார்கள். இதுதான்
ராஜாங்கம், துரைத்தனம், ஆளுகையென்று சொல்லப்படுவது.
தலால் ஒருவனுடைய பாத்தியத்துக்குங் கேடுவராமல் எல்லோ
டையவும் ஒன்றுபோலக் காத்துரட்சிப்பது ராஜாங்கத்தார் அல்
து அதிகாரிகள்மேற் சுமந்த விசேஷித்த கடமையாம்.

சில சமயங்களில் பலவந்தமாய் எடுத்துக்கொள்ளுதல், களவு
சய்தல், கொள்ளையடித்தல் முதலிய அக்கிரமங்களால் சொத்
ன்பேரிலுள்ள பாத்தியதை நாசமுறுகின்றது. ஆதலால் இவ்
த துஷ்டகிர்த்தியங்களுக்குத் தகுந்த சிட்சையும், சொத்துக்
ளுக்குப் போதுமான காவலும் துரைத்தனத்தார் செய்யாவிட்

டால் ஒரு முயற்சியும் நடந்தேறாது; ஒருவனும் ஒரு வேலையு செய்யமாட்டான். திருடர்களாலும் பொல்லாதவர்களாலும் கெ ள்ளையும் நாசமுமாகும்படி பாடுபட்டுத் தேடிவைக்கிறவ யார்? தான் தேடும்பொருளுக்கு மோசமில்லை, அழிவின்றி காப்பாற்ற தேசத்தில் நல்ல காவலுண்டு என்கிற நிச்சயம் ஒ வனுக்கு இருந்தால்தான் அவன் முயற்சிசெய்யத் துணிவா ஆதலால் ஒரு தேசத்தில் நடக்குமுயற்சியின் மிகுதி தாழ்வு அ தேசசட்டங்களின் நன்மைதீமைக்கும், நடக்கிற நீதி அநீதிக்கு தக்கவாறு இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. பிரஜைக டைய பாத்தியதை கெட்டழிந்துபோவதற்குச் சட்டம் இட கொடுக்குமானால், அல்லது சட்டம் செவ்வையாயிருந்தும் அதி படி நீதிநடப்பிக்கிற அதிகாரிகளில்லையென்றால், சகல ஜனங் ளும் சீக்கிரத்தில் திருடரும் கொள்ளையடிக்கிறவர்களுமாய்ப போவார்கள். பாடுபட்டு முயற்சிசெய்கிறவர்களிரார்கள். அத னால் பயிருமில்லை, பலனுமில்லை, வேலியுமில்லை, காவலுமில் யென்றாகும். ஆகவே, திருடி ஜீவனஞ்செய்கிறதற்குங்கூட ஒன் மின்றி எல்லோரும் பட்டினியும் பசியுமடைந்து சாவார்கள்.

வேலியே பயிரை அழித்தாற்போல சில காலங்களில் ராஜா கத்தினாலேயே குடிகளுடைய பாத்தியதைக்குக் கெடுதியுண் கிறது. விசேஷமாய் ஒரு ராஜ்ஜியம் அரசன் ஒருவனுடை தனி அரசாட்சியின் கீழிருக்கும்போது மேற்சொல்லிய கே சம்பவிக்கிறது. அதிலும் அவன் கொடுங்கோல் மன்னனாயிரு துவிட்டாலோ, உண்டாகிற தீமையைக் கூறவேண்டியதில்லை. ப ஜைகள் சகலரும் ஊக்கமிழந்து, முயற்சியற்றுச் சோர்படைந் சோம்பேறிகளாய்த் தரித்திரப்பட்டுத் துன்புறுவார்கள். பூமி லுள்ள நாடுகளிலெல்லாம் முதல்தரமானதும், மிகுந்த செழி புள்ளதுமான க்ஷேத்திரங்கள் கொடுங்கோலரசனுடைய ஆ கைக்குட்பட்டவுடனே பாழ்ந்தரிசாய்ப் போய்க்கிடக்கின்றத குடிகளும் வரவரக் குறைந்து குன்றி, தரித்திர சாகரத்திலாழ்ந் தவிக்கிறார்கள்.

ஆதலால் ராஜாங்கத்திலும் நல்ல ஒழுங்கமைந்த ராஜாங்க பிரஜைகளுடைய க்ஷேமத்துக்கு இன்றியமையாத அவசிய என்று காண்கிறோம். நல்ல ஒழுங்கமைந்த ராஜாங்கம் எங் காணப்படுமெனில், அரசனுடைய அதிகாரம் அல்லது அதிக

ாளுடைய வல்லமை இவ்வளவு என்று வரையறுத்து, அவர்
ள் செய்யத்தக்கது இன்னது, செய்யத்தகாதது இன்னதென்று
தளிவாய் நிர்மாணிக்கும்படி குடிஜனங்கள் ஐக்கியப்படுகிற
நசத்தில்தான். ஆகையால் தேசத்திலுள்ளவர்கள் அனைவரும்
வன் கெட்டாலென்ன, எவன் வாழ்ந்தாலென்ன? என் காரியத்
ற்கு யாதொரு குறைச்சலுமில்லையென்று தன்பாடுந் தானுமாய்
ாழ நினைக்கிற லுத்தகுணத்துக்கு இடங்கொடாமல், தேசக்ஷேமம்
ன்னுடைய க்ஷேமம் என்று சிந்தித்து, அதிகாரஸ்தர்கள் தங்க
க்கு ஒப்புவிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு நீதிசெய்கிறார்
ளா அநீதிசெய்கிறார்களா என்று வெகுஜாக்கிரதையும் விழிப்பு
ாயிருக்கவேண்டியது அவசியமும் ஒவ்வொருவருடைய கட
மையுமாம். அதிகாரிகளாவது அரசனாவது ஏற்பாட்டிற்குள்
மையவில்லையென்றால், அவர்களை அகற்றித் தேசசமாதானத்
த நிலைநிறுத்துவது யாவர்க்கும் கடமையே. "இறைகாக்கும்
வயகமெல்லாமவனை, முறைகாக்கு முட்டாசெயின்" என்றபடி
ரசர் முதலியோர்க்கு அவர்கள் நீதியே காவலாம். அக்காவலை
வர்கள் இழந்துபோய் அநியாயத்திலிறங்குவார்களானால், அதற்
ரிய பலனை அவர்களும் அடைவது அநியாயமல்லவே. ஆத
ால் குடிகளுடைய ஒருமைப்பாட்டினால் ராஜாங்கத்துக்கு
ல ஏற்பாடும், சகலமானபேர்களுக்கும் க்ஷேமமும் உண்டா
ற்றன.

இரண்டாவது: ஒவ்வொருவரும் தம்தமக்குரியதை தம்தம்
ஷ்டப்படி உபயோகப்படுத்த இடங்கொடுக்கவேண்டும். ஒரு
ன் தன்னாற் சம்பாதிக்கக்கூடியதெல்லாம் சம்பாதித்துக்கொள்ள
டம்பெற்றும், தன் சம்பாத்தியத்தை தன்னிஷ்டப்படி உபயோ
ப்படுத்த இடம்பெறானகில், அவன் ஒரு தொழிலிலாவது ஊக்
தோடு முயலமாட்டான். ஆதலால் அவரவருடைமையை
வரவர்க்கு நன்றென்று தோன்றுகிற விஷயங்களில் உபயோ
படுத்த இடங்கொடுப்பது முயற்சிக்கு முக்கியாநுகூலமாம்.
டைமையென்பது என்னவெனில்: முயற்சிக்குத் துணைக்கரு
ளாயும், முயற்சியின் காரியமாயுமிருக்கிற மனுஷருடைய அவ
அந்தக்கரணங்களும், ஸ்தாபரசங்கம சொத்துக்களுமாம்.
கிழமையும் பிறிதின்கிழமையுமாகிய இவ்விருவகை உடைமை
ாயும் பிறருக்கு நஷ்டமும் சங்கடமுமில்லாத விஷயங்களி

லெல்லாம் ஒவ்வொருவரும் தம்தம் விருப்பப்படி உபயோ படுத்திக்கொள்ள இடங்கொடுப்பது அவசியம்.

திருஷ்டாந்தமாக: உத்தியோகஸ்தர்கள், வேலைக்காரர், கூ யாட்கள் என்று எவ்வகை அலுவல் பார்க்கிறவர்களும் தங்களி டப்படி எந்த வேலையையாவது தெரிந்துகொள்ளவும், தங்களுக் அநுகூலமாகத் தோன்றும்போது தாங்கள் பார்த்துவந்த ஒரு வே லையைவிட்டு வேறு வேலை தேடிக்கொள்ளவும் இடமிருக்கவேண் டும். ஒருவனுடைய அலுவலைப்பற்றி நிதானிப்பதற்கு, அதனு வரும் நயநஷ்ட சுகதுக்கங்களை அநுபவிக்கிற அவனைப்பார்க் லும், அவற்றிற்கு அந்நியமான இன்னொருவன் தகுதியுள்ள னல்ல என்கிற இந்தப் பிரதிஞ்ஞையே மேற்கூறிய விதிக் ஆதாரமாம். இது விஷயத்தில் பலவந்தமென்கிறதே படாத அது முயற்சிக்கு முற்றிலுங் கேடாம். பூர்வத்தில் மற்றெ தேசங்களைப்பார்க்கிலும் மிகுந்த சீரும் செழிப்பும் செல்வமு நாகரீகமும் சிறப்புற்றோங்கிய நம்முடைய தேசம் வரவாக் குன ந்து தாழ்ந்து குன்றிப்போனதற்கு இவ்விதியைக் கைக்கொ ளாமல்போனதே ஒரு முக்கியகாரணமாம். சொற்பகாலத்துக் முன்வரையும் நம்மதேசத்தில் தகப்பன் பார்த்துவந்த தொழி யே பிள்ளையும் பார்க்கவேண்டும், வேறு தொழிலில் பிரவே கப்படாது என்றிருந்ததினால், அவரவர் தம்தம் மனப்போக் கும் திராணிக்கும் ஏற்ற ஒரு தொழிலைச் செய்யவாவது, எந் தொழிலிலாயினும் ஊக்கத்தோடு முயலவாவது இடமில்லாதி ந்தது. தற்காலத்தில் ஒவ்வொருவருக்கும் இது விஷயத்தில் சு தந்திரியம் கிடைக்கவே, எண்ணிறந்த ஜனங்கள் உத்சாகத்தே முயற்சிசெய்து முன்னுக்கு வருகிறதைக் காண்கிறோம். ஆ லால் அலுவல் விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் சுவாதீனமிருக் வேண்டும். ஒருவன் ஒரு எசமானைவிட்டு வேறு எசமானை சேவிக்கவேண்டுமானால் சேவிக்கலாம். ஒருவேலையன்றி அ வேலைகளைச்சேர்த்துப் பார்க்கவேண்டுமானாலும் பார்க்கலா ஒருவரும் ஒருவனையும் பலவந்தஞ்செய்யப்படாது. செய்த பெரிய குற்றமாம்.

அவ்வாறே வர்த்தகர்கள், தொழிலாளிகள், சமுசாரிகள் றிவர்களுக்கும் கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களில் சு தீனமிருக்கவேண்டும். துரைத்தனத்தாராவது, வேறு யாரா

துவர்களை இன்னின்ன இடத்தில் இன்னின்னபிரகாரம் தொழில் டத்தவேண்டும், இன்ன விலைக்கு விற்கவேண்டும் என்று கட்டுப் ாடு செய்யக்கூடாது. கொள்ளவாவது, கொடுக்கவாவது, வே ரன்ன செய்யவ்ாவது உடையவனைத்தவிர அந்த உடைமையின் பரில் வேறொருவருக்கும் ஒரு பாத்தியமுமில்லை. தனக்கு ஷ்டமான பொருளை இஷ்டமான கிரயத்துக்கு வாங்கவும் விற்க ம் வியாபாரிக்குச் சுவாதீனமிருக்கவேண்டும். தனக்கு விருப் மான தொழிலைச் செய்யவும், தனக்குச் சரியென்று தோன்று றபடி சம்பளம் அல்லது கூலிகேட்கவும் தொழிலாளிக்குப் ாத்தியமிருக்கவேண்டும். தன் நிலத்தில் தனக்கு இஷ்டமான தைப் பயிர்செய்யவும், தன் பலனில் தனக்கு இஷ்டமான அளவு லைப்படுத்தவும் சமுசாரிக்குச் சுதந்தரமிருக்கவேண்டும். இவ் ஷயங்களிலெல்லாம் இவர்களை ஒருவரும் கட்டாயஞ்செய்யப் டாது. செய்தால் அது முயற்சிக்கு நேர்விரோதமாம்.

அப்படியானால் வர்த்தகர்கள் பொருள்களை அநியாயமான லைக்கு விற்பார்கள், தேசத்தில் பஞ்சம் வந்துவிடும், அதனால் னங்களுக்கு மிகுந்த கஷ்டமுண்டாகும் என்று சிலர் ஆட்சே க்கலாம்; ஆயினும் காரியம் அப்படியல்ல. வியாபாரவிஷயத் ல் வர்த்தகர்களுக்குச் சுவாதீனங்கொடுப்பதினால் தேசத்துக்கு றுகூலமேயன்றி கிஞ்சித்தாவது பிரதிகூலமில்லை. முதலாவது ர்த்தகமுறைமை தெரிந்தவர்கள் தங்களுக்குக் கட்டுப்படி னதின்பேரில் காலதேச வர்த்தமானங்களுக்கு இணங்க, ாற்பலாபம் வைத்துக்கொண்டு பொருட்களை விலைப்படுத்து ர்களேயன்றி, ஒருவரும் அண்டாதபடி அதிக விலைகூறி புதை ல்காத்த பூதம்போல் தங்கள் சரக்குகளை வைத்துக் காத்துக் காண்டிரார்கள். எங்கேனும் பேராசைபிடித்த இரண்டொருத் அப்படி அதிகவிலை கூறிக்கொண்டிருப்பார்களானால், சீக்கி தில் தங்கள் மதிகேட்டின் பலனைத் தாங்களேயடைவார்கள். லிந்த இடந்தேடி ஜனங்கள் போவார்களேயல்லாமல், இவர்களி ஒருவரும் வரார்கள். அப்பொழுது அநியாய விலைக்காரர் ாயமான விலைக்குத் திரும்புவார்கள், அல்லது நஷ்டமடைவார் ர். வியாபாரிகளெல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒரு கட்டுப்பாடு ப்துகொண்டு விலையை ஏற்றினாலோவென்றால், அப்படியாகி அசம்பவம். சம்பாவியமே என்று வைத்துக்கொண்டா

லும், செட்டிமகன் தான் செட்டியாகவேண்டுமென்கிற நிபந்தனை யில்லாததினுல், வேறநேகர் இதில் அளவுக்குமிஞ்சி லாபமிருக் கிறதென்று கண்டு இதைச்செய்ய முயல்வார்கள். முயலும்போது அவரவர் தம்தம் சரக்கு முந்தி விலைப்பட்டு லாபம் பெரும்படி விலையைச் சற்று இறக்கி விற்கப்பார்ப்பார்கள். இவ்வாறு ஒவ் வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் விலையைத் தணிக்க கடை யில் சரியான விலைக்குப் பொருட்கள் வந்துவிடும். விலை இறக்கிவில்லாத வியாபாரிகள்தான் நஷ்டமடைவார்கள். வியா பாரிகள் அதிகரிக்கிறதினுல் ஜனங்களுக்கு லாபமேயன்றி நஷ்ட மில்லை. ஆதலால் எப்படிப்பார்த்தாலும் வர்த்தகர் முதலியோ ருக்குத் தொழில் விஷயத்தில் சுவாதீனமளிப்பதே முயற்சிக்கு முக்கிய அநுகூலமும், தேசத்திற்கு அளவிறந்த நன்மையுமாக்

முகஸ்துதியில் சந்தோஷப்படுகிறவனே மோசம்போகிறவன்.

ஒரு நரியானது கடும்பசியுள்ளதாய் நெடுநேரமாக எங்கும் அலைந்து இரைதேடிக்கொண்டிருக்கையில், தனக்கு முன்பே நின்ற ஓர் மரத்தின்மேலே ஒரு அணிற்பிள்ளையானது உட்கார்ந் கொண்டிருக்கிறதைக் கண்டு, இது அகப்படுமானுல் நமக்கு நல் இரையாகும், ஆகையால் இதைப் பிடித்து வாயில் போட்டு கொள்ளுகிற வகை எப்படி? அது கொஞ்சத்தில் நமக்கு அ படத்தக்கதல்லவே, அதை நமது தந்திரத்தினுல்மாத்திரம் அ படுத்தலாம்போலத் தோன்றுகிறதென்று சற்றுநேரம் யோசசு பண்ணிக்கொண்டிருந்துவிட்டு, அவ்வணிலை நோக்கி: ஓ எ பிரியசிநேகிதனே! நீ சுகந்தானு என்று சில உபசார வார்த்தை ளைச் சொல்லிவிட்டு, அதைப் பார்த்து: உன் தகப்பனையும் பா டனையும் நானறிவேன்; அவர்கள் சர்வவல்லபமுள்ளவர்கள், நிசாமர்த்தியவான்கள், ஒரேபாய்ச்சலில் ஒரு மரத்திலிரு மற்றொரு மரத்திற்குப் பாயத்தக்க அபூர்வசக்தியையுடைய கள் என்றது. இதைக் கேட்டமாத்திரத்தில் அணிலானது தன குமம் அவ்வித சாமர்த்தியங்களுண்டெனக் காட்டும் நோக்கம் தானிருந்த மரத்திலிருந்து எதிர்மரத்திற் பாய்ந்தது. பின்பு நரி

து அணிலைப்பார்த்து: மேலும் உன் தகப்பன் முதலியவர்களு
த மரத்தின் உச்சியினின்று தரையின்மேல் குதிக்குஞ் சக்தியும்
ருந்தது என்றது. உடனே அணிலானது சந்தோஷ பூரிப்பு
ன் தனக்கும் அச்சக்தி இருக்கின்றதென ரூபிக்கும்பொருட்டு,
ரத்தின்மேலிருந்து தரையின்மேல் குதித்தது. உடனே நரியா
து அதன்மேல் பாய்ந்து, அதை ஒரே கவ்வலில் தூக்கிக்கொ
டு ஓடிவிட்டது. முகஸ்துதியை நம்பிச் சந்தோஷப்பட்டதற்கு
ந்த பலன் இதுவே.

பிடிவாதக்காரன்.

ஜலத்தில் அமிழ்ந்திச் சாகிறவன் தன் கைக்கு நேரிட்ட பொ
ர் தன்னைச் சடுதியில் அமிழ்த்திக் கொல்லுகிறதாயிருந்தாலும்
தை விடாது பற்றிப் பிடித்துக்கொள்ளுகிறதுபோல, பிடிவாதக்
ாரனும் தன்னுள்ளத்திற்றோன்றும் அபிப்பிராயம் மெத்தக் கே
ள்ளதாயிருப்பினும் அதைக் குரங்குப்பிடியாய்ப் பிடித்துச் சா
க்கிறான். "மூர்க்கரும் முதலையுங் கொண்டது விடா" என்ற
தியோர் வாக்கியம் முற்றிலும் மெய்யே. யோசிக்கும்பொழுது,
டிவாதக்காரன் தன் அபிப்பிராயத்தைப் பிடித்துக்கொண்டு வா
டுகிறான் என்றல்ல, அவனது அபிப்பிராயமே பேய்பிடித்தது
பால் அவனைப் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது என்று சொல்ல
வண்டும். பேய்பிடித்தாலும் பித்தம்பிடித்தாலும் சிலவேளை
மோசனமுண்டு. தப்பபிப்பிராயம் பிடித்துக்கொண்டால் அதற்
த் தப்புவதரிது. பிடிவாதக்காரனுடைய அறியாமையின் ஆழத்
தையும் நீளத்தையும் அளவிட முடியாது. பட்டப்பகற்போற் பிர
ாசமான தெள்ளிய சத்தியத்தின் கிரணங்களும் அதை ஊடுரு
ச் செல்லா. அது தன்னுளுகைக்குள் எதுவந்து சிக்குகிறதோ
தைத் தடவிப் பிடித்துக்கொள்ளுகிறது. அப்புறம், கவந்த
சதன் கையில் அகப்பட்ட பொருள் விடுதலையானாலும், இது
டுதலையாகப்போகிறதில்லை. பிடிவாதக்காரனுடைய மூளையான
எவ்வளவு பலத்த நியாயமும் உட்பிரவேசிக்கக்கூடாத துருக்
ம்போலிருக்கிறது. ஆயினும் அதனுள், தப்பெண்ணங்களும்
ாவிநியாயங்களும் பொய்யானவைகளும் வந்து குடிபுகுந்து

வாழ்ந்திருப்பதற்கு, வாசல் விரிவாய்த் திறந்துகிடக்கிறது. பிடித் பிடி விடாது சாதிக்கிற அகங்காரியுடைய அபிப்பிராயங்கள் எவ் வளவு துர்பலமும் பழுதுமாயிருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அ கமாய் அவன் வைராக்கியமும் பலமுமாய் அவற்றைப் பிடித் வாதிக்கிறுன். அல்லவென்றால், அவை நிலையா என்பது அவனு குத் தெரியும். நியாயபலமில்லாத அபிப்பிராயங்களுக்கு வாய் பலத்தாலாவது அடைகட்டாவிட்டால் அரைநிமிஷமாவது நி லாமல் அடியோடே சாய்ந்து விழுமாதலால், தப்பபிப்பிராயமுை யோர் எப்பொழுதும் தங்கள் கருத்துக்களை யதார்த்தவாதிகளை. பார்க்கிலும் மிகுந்த நிச்சயத்தோடும் உறுதியோடும் சாதித்து வ புறுத்துவார்கள். அவர்கள் போராடுவதெல்லாம் காரியமல்லா, காரியத்திலேதான். அவசியமும் அரும்பயனுமுள்ள பெரிய கா யங்களையெல்லாம் விட்டுவிட்டு, அநாவசியகமும் அப்பிரயோஜ முமானவைகளைமாத்திரம் பிடித்துக்கொண்டு சலஞ்சாதிப்பார்க பசுவினது விம்மிச்சுரந்த முலையிற் பாலுண்ணவறியாது உதி அருந்தும் உண்ணிபோல, அவர்கள் புத்தியானது அற்பமா வீண்காரியங்களைப் பெரிதாக மதித்து ஆவலோடு பற்றுகிறது. உ கத்தில் தன்னைத்தவிர வேருெருவருக்கும் சரியான புத்தியில்ை யென்பது மூடனுடைய கொள்கையாதலால், அக்கொள்கைை அநுசரித்து நடக்கும் பிடிவாதக்காரனும் தன் புத்தி, தன் யோசனை தன்னெண்ணம், தன் கட்சி என்றிவற்றைத்தவிரப் பிறிதொன்ை யும் அறியான். பிறர் எவ்வளவு நியாயங்கூறினும் "குன்றி மேற் கொட்டுந்தறிபோற் றலைதகர்ந்து, சென்றிசையா வாதஞ் செ விக்கு." ஆதலால் பிடிவாதமென்னும் பேய்பிடித்த மூர்க்க டன் பேசாதிருத்தலே பெரியோர்க்கழகாம்.

வீட்டுக்காரியங்கள் செம்மையாய் நடப்பதற்கு அநுகூலமான மூன்று பிரமாணங்கள்.

1. ஒவ்வொன்றையும் அதனதன் நேரத்தில் செய்.
2. ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் வை.
3. ஒவ்வொன்றையும் அதனதன் உபயோகத்திற்குத் தக் பிரகாரம் வைத்திரு.

ஆபிரிகாகண்டத்தில் மங்கோபார்க் என்பவர் செய்த பிரயாணங்கள்.

இதற்கு 80 வருஷத்திற்குமுன் இங்கிலாந்துதேசத்தில் தேசாபி
னசிந்தை பரோபகாரகுணமுள்ள சில பிரபுக்கள் ஒன்றுகச்
ர்ந்து ஆலோசனைசெய்து, அதுவரையிலும் ஐரோப்பியருக்கு
ற்றும் தெரியாதிருந்த ஆபிரிகாகண்டத்தின் மத்தியபாகங்களுக்
க் தகுதியான ஒருவரை அனுப்பி, அவர் அவ்விடங்களையெல்
ம் சுற்றிப்பார்த்து அவற்றின் சீர்திர்வாகங்களைத் திட்பநுட்ப
ய் அறிந்து வெளிப்படுத்தும்படி செய்யவேண்டுமென்று தீர்மா
தார்கள். இந்நோக்கத்தின்படி அப்பிரம்மாண்டமான கண்டத்
குள் பிரவேசித்து, நீடித்த பிரயாணங்களைச் செய்து, ஐரோப்
யருக்குத் தெரியாதிருந்த இடங்களையெல்லாம் கூர்ந்து பரிசோ
த்து, அவற்றின் விசேஷங்களை யூகமாய் அறிந்து தெளிவாய்
ளிப்படுத்துவதற்கு, கல்வி சாமர்த்தியம், விவேகம், மனோதை
ம் முதலியவற்றில் குறைவில்லாத ஒருவரைத் தெரிந்து ஏற்படு
வேண்டுமென்று அவர்கள் வெகுநாளாய்த் தேடிப் பார்த்துக்கொ
ருந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில் (Mr. Mungo Park)
கோபார்க் என்ற நாமமுடைய அங்கிலேயர் ஒருவர் (East
es) கீழ்இந்தியா தீவுகளுக்கு யாத்திரைசெய்துவிட்டுத் திரும்
கம் சுயதேசத்திற்கு வந்து சேர்ந்து, மேற்படி பிரபுக்களின்
கத்தைக்குறித்துக் கேள்விப்பட்டு, அவ்வரிய பிரயாணத்
தாம் செய்துமுடிக்கவேண்டுமென்று மிகவும் ஆசித்து, உட
லோசனைத் தலைவர்களிடம்போய்த் தம் விருப்பத்தை வெ
டார். ஆபிரிகாகண்டத்தில் ஐரோப்பியருக்குத் தெரியாத
களைத் தாம் பரிசோதனை செய்து, அவற்றின் தன்மையை
வ்விடங்களில் காணப்படும் நாநாவித அதிசயங்களையும்
வேண்டுமென்றும், அப்பிரதேசங்களில் வாசஞ்செய்யும்
ளின் தன்மை, குணதிசயங்கள், நடைஉடைபாவனை முத
வழக்கங்கள் இப்படிப்பட்டவையென்று அறியவேண்டுமெ
மங்கோபார்க் என்பவருக்கு மிதமிஞ்சின ஆசையிருந்தது.
கா பிரயாணத்தில் சம்பவிக்கும் மோசங்கள் வருத்தங்கள்
யவை அநேகரை அதைரியப்படுத்திப் பின்வாங்கிப்போ

கும்படி செய்திருந்தும், அவைகள் மங்கோபார்க் என்பவ
கிருந்த மிகுந்த ஆசையையும், அவருக்கு இயல்பாயுள்ள திட
தத்தையும், மனோதைரியத்தையும் சற்றென்கிலும் அசைக்கக்கூ
மல்போயிற்று. ஆபிரிகாகண்டத்தைத் தாம் பரிசோதித்தறி
அதைப்பற்றிய புவனசாஸ்திர அறிவை அதிகப்படுத்தவேண்
மென்ற விருப்பத்தினாலும், தாம் கண்டுபிடிக்கும் நூதன தேச
ளில் தம் சுயதேசஸ்தர்கள் வியாபாரம் முதலியவற்றை நடப்பித்
அதிகச்செல்வம் வல்லமை முதலியவற்றை அடையவேண்டு
ன்ற மிகுந்த ஆசையினாலும், தமக்கு இக்காரியத்தில் நேரிடும்
சங்கள் வருத்தங்களொன்றையும்பற்றி அவர் சற்றென்கிலும்
லைப்படாமல் உறுதியான தீர்மானஞ்செய்து, அப்பிரயாணத்தி
குத் தம்மை நியமிக்கும்படி மிகுந்த ஆவலுடன் கேட்டுக்கொ
டார். ஆலோசனைச்சபையார் உடனே அவர் விண்ணப்பத்
அங்கிகரித்துக்கொண்டு, இவ்வரியகாரியத்தைச் சித்திபெறச்செ
து முடிப்பதற்கு அவர் முற்றிலும் தகுதியுள்ளவர்தானேவெ
அறியும்பொருட்டு, பலவிஷயங்களில் அவரைப் பரிக்ஷைப
ணிப்பார்த்து, அவருடைய அறிவு, புத்தி, சாமர்த்தியம் முதலிய
றைக்குறித்து மிகவும் திர்ப்தியடைந்து, உடனே அவருடைய
யாணத்திற்கு அவசியமாயிருக்கும் சாமான்களையும் கருவிகளை
ஆயத்தப்படுத்தி, அவருக்கு நேரிடும் செலவுகளுக்கு வேண்டி
பணத்தை ஆபிரிகாகண்டத்திலுள்ள (The Gambia) காம்
நதிக்கரை ஓரத்தில் அங்கிலேயர் ஸ்தாபித்திருந்த வியாபாரஸ்
னத்தில் அலுவல்பார்த்துக்கொண்டிருந்த டாக்ட்டர் லேடு
என்பவரிடத்தில் வாங்கிக்கொள்ளும்படி அவருக்கு ஒரு கடிதங்
கொடுத்தார்கள்.

இவ்வாறு ஆலோசனைச்சபையார் ஆபிரிகா பிரயாணத்
அவசியமான சகல எத்தனங்களையும் செய்தபின்பு, பார்க்
பவரை அழைத்து, அவர் இப்பிரயாணத்தில் கருதவேண்டிய
நோக்கங்களையும், அதை நடத்தவேண்டிய முறையையும்,
கண்டுபிடிக்கவேண்டிய காரியங்களையும் அவருக்கு விபர
தெரிவித்தார்கள். அவர் செய்யும்படி அவர்கள் குறித்தகாரிய
ளவையெனில்: அவர் இங்கிலாந்திலிருந்து கப்பலேறி
காகண்டத்தைச் சேர்ந்தவுடனே அதிலிருக்கும் (The N
நைஜர் என்னும் விசேஷித்த நதியைப் பரிசோதிக்கும்பொ

mbouk) பாம்பவுக்கின் மார்க்கமாயாவது, அல்லது தமக்கு தியாகக் காணப்படும் வேறெந்த மார்க்கமாயாவது புறப்பட ண்டுமென்றும், கூடுமானல் அந்நதியின் உற்பத்தியையும், அந் தையும், அது செல்லும் மார்க்கத்தையும் திட்பநுட்பமாய்க் டுபிடிக்கவேண்டுமென்றும், அந்நதிக்கு அருகான்மையிலிருக் ம் பிரதான பட்டணங்களுக்கு எவ்வித பிரயாசப்பட்டும் ாய்ப் பார்த்துவரவேண்டுமென்றும், விசேஷமாய் கடல்கரை வெகுதூரத்தில் இருப்பனவென்றும், மிகுந்த செழிப்பும், ல்வமும், ஏராளமான குடிகளும் நிறைந்திருப்பனவென்றும், பிரிகானர்களால் மிகவும் வியந்து பேசப்பட்ட (Tombuctoo) பக்ட்டு, (Houssa) ஹௌசா என்னும் நகரங்களைப் போய்ப் ர்த்து அவற்றின் விசேஷங்களை அறியவேண்டுமென்றும், கடை காம்பியாநதி மார்க்கமாயாவது, அல்லது தமக்கு நலமாகத் றும் வேறெந்த மார்க்கமாயாவது சுயதேசத்துக்குத் திரும்பி வண்டுமென்றும் அவருக்குக் கற்பித்தார்கள்.

ங்கோபார்க் இவ்வித நோக்கங்களையுடையவராய் 1795-ஞ 22உ இங்கிலாந்தின் தென்பாகத்திலுள்ள (Portsmouth) ட்ஸ்மௌத் என்னும் துறைமுகத்தினின்று (Endeavour) என்ற பேரையுடைய ஓர் கப்பலிலேறி ஆபிரிகா நோக்கிப் புறப்பட்டார். அம்மரக்கலமானது ஆபி த்தின் கீழ்பாகத்திலுள்ள காம்பியா மாகாணத்தில் து, யானைக்கொம்பு முதலிய சரக்குகளைக் கொள்ளும் டத்திற்குப் போக்குவரவு செய்துகொண்டிருந்த ஒரு அதை (Captain Richard Wyatt) ரிச்சர்ட் னும் கப்பல்தலைவன் நடத்தினன். கப்பல் அட் முத்திரமார்க்கமாய் யாதொரு புசல் முதலிய இ ன்றி வெகு நேர்த்தியாய்ப் பாய்விரித்தோடிற்று. மிகவும் இன்பமானதாயிருந்தது. ஜூன்மீ 4உ ஆபி ாரத்திலுள்ள (Magadore) மாக்டோர் என்னும் கொடிமுடியை தூரத்தில் கண்டார்கள். அம்மாசம் வது புறப்பட்ட முப்பதாம்நாளில் யாதொரு மோசஞ் மி, காம்பியாநதியின் வடகரையிலுள்ள (Jillifree) என்னும் பட்டணத்தினருகே வந்து, முன் இங்கிலீசுக் கோட்டையொன்று கட்டியிருந்த (James' Island)

ஜேம்ஸ் ஐலன்ட் என்னும் சிறுதீவிற்கெதிரே நங்கூரம் பே
டார்கள்.

மேல்கண்ட ஜில்லிபிரி என்னும் பட்டணம் (Barra) பா
என்னும் ராஜ்ஜியத்திலிருக்கின்றது. இவ்விராஜ்ஜியத்தில் ஜ
களின் வாழ்விற்கவசியமான பொருள்களெல்லாம் அபரிமித
யுண்டாகின்றன. அத்தேசத்து ஜனங்கள் நடப்பிக்கும் வி
ஷித்த வியாபாரம் உப்பு. இதை அவர்கள் சிறு படவுகள
ஏற்றி, காம்பியா நதிமார்க்கமாய்க் கடல்கரைக்குத் தூரமான
களுக்குக் கொண்டுபோய், அவ்விடங்களிலுள்ள குடிகளுக்கு
பைக் கொடுத்துவிட்டு, அவர்களிடத்திலிருந்து மக்காச்சோள
பருத்திநூல் புடவை, யானைப்பல், யானைக்கொம்பு, பொ
மணல் முதலிய சரக்குகளைக்கொண்டு இவ்வாறு பரிவர்த்தன
செய்கிறார்கள். பாரா ராஜ்ஜியத்தின் அரசனானவன் காம்
நதியைச்சேர்ந்த மற்ற நாடுகளிலுள்ள குறுநிலமன்னமெ
ளைப்பார்க்கிலும் ஐரோப்பியருக்கு அதிக விரோதத்தைக்
பித்துவந்தான். அந்நியதேசங்களிலிருந்து தன் ராஜ்ஜிய
வியாபாரஞ் செய்யவரும் வர்த்தகரெல்லாம் தனக்குப்
தீர்வைகளைச் செலுத்தும்படி சட்டங்கள் செய்திருந்தான்.
நியதேசத்து வர்த்தகக்கப்பல்கள் பாரா ராஜ்ஜியத்தை
வுடனே, மரக்கலமொன்றுக்கு ஏறக்குறைய இருபது
லது இறநூறு ரூபாய் வீதம் அவ்விராஜனுக்குத் தீ
தப்பட்டது. மரக்கலம் சிறிதென்றாலும் பெரிதென்றா
ஒரேவிதமாயே வாங்கப்பட்டது. இத்தீர்வைகளை ஜில்
ணத்தில் தலைவனாக அதிகாரஞ்செலுத்திவந்த உத்தியோ
வன் ஏராளமான பரிவாரங்களுடன் வந்து வர்த்தகரி
டிக்கொண்டுபோவான். அவனுடன் வரும் ஜனங்
அங்கிலேயரோடு அடிக்கடி பழகிவந்தபடியால் இங்கி
பேச ஒருவாறு கற்றிருந்தார்கள். ஜூன்மீ 23௳
என்னும் கப்பல் ஜில்லிபிரி பட்டணத்தைவிட்டுப்
காம்பியா நதிக்குத் தென்திசையில் ஓர் முகத்துவாரத்தி
யிருக்கும் (Vintain) வின்டேயின் என்னும் பட்ட
போய்ச் சேர்ந்தது. இவ்விடத்தில் தேன்மெழுகு அ
அகப்படுமாகையால் அதைக் கொள்ளும்படி ஐரோ
பாரிகள் மிகுதியாய் அவ்விடத்திற்குப் போகிறது

மெழுகை (Feloops) பீலூப்ஸ் என்னப்படும் பாமரர்களான ஓர் விதக் காட்டுஜனங்கள் காடுகள் மலைகளிலிருந்து சேகரித்துக் கொண்டுவருகிறார்கள். இச்சனங்கள் வாசம்பண்ணும் நாட்டில் நெல் ஏராளமாய் விளைகின்றது. சுதேசிகள் இத்தானியத்தையும், வெள்ளாடு கோழி முதலிய ஜெந்துக்களையும் காம்பியாநதி ஓரங்களிலுள்ள ஊர்களுக்கு வரும் அந்நியதேசத்து வியாபாரிகளுக்குச் சொற்பக் கிரயத்திற்கு விற்கிறார்கள். இந்த தேசத்தில் ஜனங்கள் பனைவெல்லமுதலியவற்றிலிருந்து சாராயத்தை வடிப்பது போல, பீலூப்ஸென்னும் ஜனங்கள் தங்கள் நாட்டில் மிகுதியாய் ...ப்படும் தேனிலிருந்து ஓர்வித மதுபானத்தை வடித்து அதை ...ந்தி வெறிகொள்ளுகிறார்கள்.

ஜூன்மீ 26உ பார்க் என்பவர் வின்டேயின் என்னும் பட்...த்தைவிட்டுப் புறப்பட்டு, காம்பியா நதியின்மேல் கப்பல்யாத்...ை செய்தார். இந்நதியானது அதிக ஆழமுள்ளது. அதன் ... சேற்றினால் கலங்கியிருக்கும். அதன் கரை ஓரங்களிலெல் ... அடர்ந்த புதர்களும் செடிகளும் முளைத்திருக்கின்றன. ...்குச் சுற்றிலுமுள்ள நாடோ சமபூமியானதும், சதுப்புநில ...ளதுமாயிருக்கின்றது. ஐரோப்பாகண்டத்தில் அகப்படாத ...க ஜாதி நேர்த்தியான மீன்கள் இந்நதியில் காணப்படுகின் .... மேலும் அதில் பயங்கரமான சுறுமீன்களும், முதலைகளும், ...ppopotamus) இப்பொப்போற்றேமஸ் அல்லது நதிக்குதிரை ...னப்படும் அதிசயமான ஜெந்துக்களும் ஏராளமாய் வாசஞ் ...கின்றன. கடைசியில் சொல்லப்பட்ட விநோதமான ஜெந் ...ன் தன்மையைப்பற்றிச் சற்று விவரமாய்ச் சொல்வது இதை ...்போர்க்கு இன்பத்தைக் கொடுக்குமென்பதற்குச் சந்தேக ....

...ப்பொப்போற்றேமஸ் அல்லது நதிக்குதிரை என்னப்படும் ...தின் ரூபத்தையும் பருப்பத்தையும் நோக்குகையில், அதற் ... கடல்யானை அல்லது கடல் காண்டாமிருகமென்ற நாமம் ...தாயிருக்கும். அது காண்டாமிருகம் அவ்வளவு பரிமாண ...ளதாயும், அதைப்போலவே பயங்கரமுள்ளதாயுமிருக்கின் ... அதன் உடல் பாரியாயும், உருண்டையாயும், பார்வைக்கு ...தக்கேடுள்ளதாயுமிருக்கின்றது. அதன் தலை பெரிதும், வாய் ...ண்டதும், கண்களும் செவிகளும் மிகச் சிறியவைகளாயுமி

ருக்கும். அதன் நாலு கால்கள் கனத்துக் குன்றினவைகளாய்க் கவர்க்குளம்புகளை உடைத்தாயிருக்கும். அதன் வால் குறுகித் தட்டையானது. அதன் தேகத்தின்மேல் இங்குமங்குமாக வெள்ளைநிறமுள்ள ரோமங்கள் சிதறி முளைத்திருக்கும். அதன் தோல் மிகவும் கனத்தது. அதைக் கூருள்ள பட்டயம் ஊடுருவுவது வருத்தம்.

இப்பொப்போற்றேமஸ் என்னும் இச்செந்துக்கள் ஆபிரிகா கண்டத்திலுள்ள பாரி நதிகளிலும் ஏரிகளிலும் வாசம்பண்ணுகின்றன. அவைகள் நிலத்தின்மேலும் நடமாடித் திரிந்து ஜீவிக்கத்தக்க தன்மையுள்ளவைகள். இப்பொப்போற்றேமஸ் நி... தில் யானையைப்போல் நடந்துதிரியும்; ஜலத்தில் நீர்வாழும் ... துக்களைப்போல வெகு பலத்தோடு நீந்திக்கொண்டுபோம். ... தன் இரை மீன்களும், நதிக்கரை ஏரிக்கரை ஓரங்களில் மு... திருக்கும் புல் பூண்டு முதலியவைகளுமே.

இச்செந்துக்கள் சாதாரணமாய் மிகுந்த சோம்பலும் மந்த... முமுள்ளவைகள். பசியினால் ஏவப்படும் சமயத்தைத்தவிர, வேளைகளில் யாதொரு செயலுமற்றுச் சோம்பலாய்க்கிடக்... பசியின் உபத்திரவமுண்டானவுடனே நாலைந்து ஜெந்து... ஒன்றாய்ச்சேர்ந்து, நதியின் ஆழமான இடங்களில் அணி அ... யாய் நின்றுகொண்டு, தங்கள் எட்டுக்குள் வரும் மீன்களை ... சாமர்த்தியத்துடன் பிடித்துச் சாப்பிடும். சில சமயங்களில் ... களைப் பின்தொடர்ந்து வெகுதூரம்வரையில் தளராது நீந்திக்... ண்டுபோகும். இச்செந்துக்கள் ஜலத்தின்கீழ் முப்பது அல்... நாற்பது நிமிஷமட்டும் தங்கியிருந்துவிட்டுப் பின்பு ஆகாயத்... சுவாசிக்கும்பொருட்டு மேலே எழும்பும்.

ஜலத்தில் தனக்கு வேண்டிய மீன் ஆகாரம் அகப்ப... போகும் சமையங்களில் இப்பொப்போற்றேமஸ் ஜலத்தைவி... கரையேறி, கரையின்மேல் முளைத்திருக்கும் புல் பூண்டுகளைத்... னும். நதிக்கரை ஓரங்களிலும் ஆகாரம் கிடையாமல் போ... வேளைகளில் அது தூரமாய் நடந்துபோய், ஜனங்கள் ப... டிருக்கும் வயல்கள் தோட்டங்களில் விழுந்து பயிர்களை அ... துப்போடும். இப்படிப்பட்ட சமையங்களில் இச்செந்துக... எதிர்ப்பது வீணாயிருக்கும். ஏனெனில் அவைகளைக் கோப... டினால், அவைகள் மிகவும் பயங்கரப்படத்தக்கவண்ணமாய் ...

த்தையடைந்து வெகு சேதங்களையுண்டுபண்ணும். இவ்வாறே அவைகள் நதிகளிலிருக்கையிலும், சிலவேளை பெரியதீங்குகள் செய்கின்றன. நதிகளின்வழியாய்ப் படவுகளில் ஜனங்கள் யாத்திரைசெய்கையில் அவர்கள் இச்செந்துக்களைக் காணும்பொழுது அவைகளுக்கு ஒன்றுஞ்செய்யாமலிருந்தால், அவைகளும் அவர்களுக்கு யாதொரு தீங்கையும் செய்கிறதில்லை. ஆனால் படவில் போகையில் ஜனங்கள் புத்தியீனமாய் அவைகளுக்கு ஏதாகிலும் தொந்தரவு செய்வார்களாகில், உடனே அவைகள் அகோரமான மூர்க்கவெறிகொண்டு, அவர்களுக்குச் சேதங்களை வருவிக்கும்பொருட்டு அவர்களின்மேல் பாயும். சில சமையங்களில் படவைப் பல்லினால் கவ்வி கீழே இழுத்துக் கவிழ்த்துவிடும். சிலவேளை படவின் அடியில்போய் முதுகினால் அதைத் தூக்கிக் கவிழ்த்துவிடும்.

பெண் இப்பொப்போற்றேமஸ் கரையின்மேல் போய்க் குட்டிபோடும். ஒரு சமயத்தில் அது ஒரே ஒரு குட்டிதான் போடும். எங்கேயிருந்தாவது சொல்ப சப்தம் உண்டானால் தாயானது உடனே ஜலத்திற்குள் பாயும். அந்நிமிஷமே குட்டியும் அதன் பின்னே அதிக விரைவோடு தண்ணீருக்குள் செல்லும்.

வாலிபத்திற் செய்யவேண்டிய பழக்கங்கள்.

(தொடர்ச்சி.)

ஐந்தாவது· அதிகாலையில் எழுந்திருக்கப் பழகவேண்டும்.

நித்திரையானது எல்லோர்க்கும் இன்றியமையாததும், சுகத்துக்கு முக்கிய காரணமுமானாலும், அளவுக்கு மிஞ்சினால் கேடு விளைவிக்கத்தக்கது அதைப்போல வேறொன்றுமில்லை. விசேஷமாய் வாலிபர்க்கு நித்திரையிற்பிரியம் அதிகம். அவர்கள் அப்பிரியத்துக்குக் கொஞ்சம் இடங்கொடுத்துவிட்டால், அப்புறம் அதன் பந்தத்தினின்று நீங்குவதரிது. ஆகையால் வாலிபர்கள் ஒவ்வொருநாளும் தவறாமல் அதிகாலையில் நித்திரைதெளிந்தெழுந்திருக்கப் பழகவேண்டியது அவசியம். இப்பழக்கமில்லாதவர்கள் பெரிய காரியங்களைச்செய்து உலகத்தில் பேரெடுப்பது அருமை. அதிகநேரம் தூங்குகிறவர்களுக்கு ஆயுசுகூடக் குறுகிப்

போம். சரித்திரங்களை ஆராய்ந்துபார்த்தால், நெடுநேரம் நித்திரைபண்ணும் பழக்கமுடையவர்கள் நீடித்த ஆயுசுக்கு வந்தெட்டினது அபூர்வமென்று காண்போம். விடிந்து வெகுநேரஞ் சென்று விழித்து அப்புறம் வேலைபார்க்க ஆரம்பித்தால், அன்றைக்குப் பாதி அலுவல்கூடப் பார்க்கமுடியாது. நித்திரைமயக்கமே பின்னும் நெடுநேரமிருக்கும். (Franklin) பிராங்கிலின் என்னும் ஒரு சாஸ்திரி: நேரஞ்சென்று எழுந்திருக்கிறவன் அந்நாள் முழுமையும் ஓடிஓடி வேலைசெய்தாலும் அது சரிவர முடிவதரிது என்கிறார். (Dean Swift) டீன்சுவிட் என்னும் வேறொரு சாஸ்திரி: சூரியோதயமான பின்பும் தூங்குகிற பழக்கமுடையவர்களிலொருவனாவது உலகத்தில் முன்னுக்கு வந்ததைத் தாம் கண்டதில்லையென்று வற்புறுத்துகிறார்.

(Buffon) பவ்வோன் என்று பேர்போன ஓர் நூலாசிரியர் தாம் செய்த நூல்களின் வரலாற்றைப்பற்றிப் பேசுங்கால், அடியில் வருகிற விர்த்தாந்தத்தைச் சொல்லுகிறார். நான் (Buffon) வாலிபனாயிருக்கையில் எனக்குத் தூக்கத்தில் மிகுந்த பிரியமிருந்தது. அப்பிரியத்தினால் அருமையான எவ்வளவோ காலம் அவமாய்ப் போயிற்று. இனிக் காலையில் நித்திரைசெய்யப்படாதென்று பலதரம் நிருணயித்தேன்; ஒருதரமாவது ஜெயம் பெறவில்லை. நித்திரையின் வல்லமை என்னை மேற்கொண்டுவிட்டது. என்ன பிரயாசப்பட்டாலும் தனித்து அதனோடு போராட என்னாலாகாது என்று கண்டேன். கடைசியில் நித்திரையென்னும் இந்தச் சத்துருவை வெல்லுவதற்கு எனக்குத் துணைநின்றவன் என் வேலைக்காரனாகிய யோசேப்பு என்பவன். ஒருநாள் நான் அவனை அழைத்து, நாடோறும் காலமே ஆறுமணிக்கு நான் எழுந்திருக்கும்படி நீ என்னை எழுப்பிவிட்டால், ஒவ்வொரு நாளும் நான் உனக்கு (a crown) இரண்டரை ரூபாய் இனும் தருவேனென்று வாக்குப் பண்ணினேன். அப்படியே அவன் மறுநாட் காலமே ஆறுமணிக்கு வந்து என்னை எழுப்பினான்; அன்று அவனுக்குக் கிடைத்த வெகுமதி அத்தருணத்தில் என் வாயிலிருந்து பிறந்த வசவும் திட்டுந்தான். அடுத்தநாட் காலையிலும் வந்து அலட்டினான்; அன்றும் அதற்கு இரண்டத்தனை கிடைத்தது. மத்தியான நேரத்தில் நான் அவனைக் கூப்பிட்டு: யோசேப்பு, நீ முட்டாள்; வேலைக்கு உதவமாட்டாய்; நித்திரைமயக்கத்தில் நான் புலம்பும் வீண்வார்த்தை

க்கு நீ அஞ்சலாமா? தெளிந்த புத்தியுடனிருக்கையில் நான் உனக்குச் செய்திருக்கிற வாக்குறுதியை அல்லவா நீ நம்பவேண்டும். இனிமேல் நான் அந்த நேரத்தில் என்னசொன்னாலும் அதற்கு நீ செவிகொடாமல், எவ்விதமும என்னை எழுப்பிவிடப் பார்க்கவேண்டும் என்று புத்திசொனனேன். மறுநாட் காலமே அவன் அப்படியே வந்து பிடித்துக்கொண்டான். நான என்னாலானதெலலாம் வைத்துப்பார்த்தேன், நலலவார்த்தை சொன்னேன், கெஞ்சினேன், கும்பிட்டேன், கோபித்தேன், அதட்டினேன், திட்டினேன், வேலையைவிட்டு உன்னைத் தள்ளிப்போடுகிறேன் பார் என்று பயமுறுததினேன், ஆனால் ஒன்றும நடந்ததில்லை. உம்மைத் தூங்கவொட்டேனென்று ஒரேபிடியாய்ப் பிடித்துக்கொண்டான். அப்புறம் என்னசெய்கிறது? படுக்கைவிட்டெழுந்திருந்தேன். உடனே அவனுக்கு இரண்டரை ரூபாய் இனும் கொடுததேன். அந்தப்படியே அவன் என்னை எழுப்புகிறகாலமெல்லாம் அவன் கேட்கும் ஏச்சுக்கும் வசவுக்கும பதிலாக அதற்கு இரண்டொரு மணிநேரத்துக்குப்பின் இனாமும் உபசாரமும் பெற்று வந்தான். ஆதலால் நான் செய்த நூல்களில் பத்துப் பன்னிரண்டு புஸ்தகங்கள்வரையும் யோசேப்பினுடைய உதவியினாலே முடிந்ததென்று நன்றியறிதலோடே சொல்லவேண்டும் என்கிறார்.

புருஷிய அரசனாகிய இரண்டாம் (Frederick) பிரடெரிக் என்பவர் மிகவும் வயதுசென்று தளர்ந்துகொண்டகாலத்திலுங்கூட, விடியற்காலம் நாலு மணிக்குப்பின்பு தாம் நித்திரைசெய்யாதபடி தம்மை எழுப்பிவிடவேண்டுமென்று தமது பணிவிடைக்காரருக்குக் கற்பித்திருந்தாராம். மிகுந்த புகழ்பெற்றோங்கிய ருஷிய சக்கிரவர்த்தியாகிய (Peter the Great) மகா பேதுரு என்னும் சிறந்த நாமதேயமுடைய மன்னன், லண்டன் ராஜதானியில் வந்து கப்பல் உண்டுபண்ணுகிற கழிக்கரையில் தச்சுவேலை பார்த்துவருகிற காலத்திலும், உலைக்களத்தில் கொல்வேலை செய்து பழகுகிற சமயத்திலும், ஸ்வயதேசத்தில் பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், கிரீடாதிபதிகள் புடைசூழச் சிம்மாசனாதிபதியாய் வீற்றிருந்து அரசுபுரியும் நாளிலும் அருணோதயத்துக்கு முன்னே எழுந்திருக்கும் பழக்கமுடையவராயிருந்தாராம். இவ்விஷயத்தைப்பற்றி அவர்தாமே சொல்லுகிறதென்னவெனில்: "என் ஆயுசு காலத்தை என்னாலியன்றமட்டும் நீடிக்கப்பண்ண விரும்பி, கூடிய

வரையில் என் தூக்கத்தைக் குறைக்கப்பார்க்கிறேன் என்பதே. மகா கல்விமானாகிய (Doddridge) டாடிரிஜ் என்னும் வேதசாஸ்திரி இதைப்பற்றிச் சொல்லுகிறதை யாவரும் கவனிக்கவேண்டும். எனக்கு மிகுந்த பிரயோஜனமானதென்று நான் என் அநுபவத்திற் கண்டதும், நான் செய்த நூல்கள் பலவற்றிற்கு முக்கிய காரணமாயிருந்ததுமான ஒரு விசேஷத்தை இதனடியில் வரைகிறேன். அதென்னவெனில், காலமே ஏழுமணிக்கும், விடியற்காலம் ஐந்து மணிககும எழுந்திருக்கிறதிலுண்டாகும் வேவித்தியாசமேயாம். இரண்டுபேர் ஒரே நேரத்தில் படுக்கைக்குப் போகிறார்களென்றும், ஒருவன் காலமே ஏழுமணிக்கும், மற்றவன் விடியற்காலம் ஐந்துமணிக்கும் எழுந்திருக்கிறானென்றும் வைத்துக்கொண்டால், ஏழுமணிக்கு எழுந்திருக்கிறவனைப்பார்க்கிலும் ஐந்துமணிக்கு எழுந்திருக்கிறவன் தன் ஆயுசுகாலத்தோடு பத்துவருஷம் அதிகம் கூட்டிக்கொண்டதற்குச் சரியாகிறது" என்கிறார்.

அதிகாலையில் எழுந்திருக்கப் பழகவேண்டுமானால், இராத்திரியில் நேரப்படப் படுத்துக்கொள்ளவேண்டும். முன்னேரத்தில் படுத்து நித்திரைசெய்வதினால் அதிகாலையில் எழுந்திருக்க ஏதுவுண்டாகிறதுமாத்திரமல்ல, வேறு பல நன்மைகளுமுண்டு. சரீரசுகம் கெட்டுப்போகாது; கண்ணுக்கு ஊனம் உண்டாகாது. வாலிபர்க்கு இராக்காலங்களிலுண்டாகும் அநேகவித சோதனைகளுக்கும் கண்ணிகளுக்கும் இடங்கிடையாது. முன்னேரத்தைத்தான் மாந்தர் இளைப்பாறுவதற்குத் தகுந்த நேரமாகக் கடவுள் அமைத்திருக்கிறாரென்று தோன்றுகிறது. நடுராத்திரிக்கு முன்னுள்ள ஒருமணிநேரத் தூக்கமும், அதற்குப் பின்புள்ள இரண்டுமணிநேரத் தூக்கமும் தம்மில் ஒன்றுக்கொன்று சரியென்று ஒரு சாஸ்திரி சொல்லுகிறார். ஆதலால் இராத்திரியில் பத்துமணி அடிக்கிற சத்தம் உன் காதில் விழாதபடி அதற்கு முந்தியே விளக்கணைத்துப் படுத்துக்கொள். அப்பொழுது விடியற்காலம் ஐந்துமணிக்கு எழுந்திருக்கிறது வருத்தமாயிராது. கவலையற்றுத் தூங்குகிற ஏழுமணிநேரத் தூக்கம் மனுஷருடைய சுகத்துக்குப் போதுமானது.

எப்பொழுதும் பத்துமணிக்கு விளக்கணைத்துப் படுத்துக்கொள்ளுகிறது என்கிற பிரமாணத்தினால் பிரயோஜனமென்ன? படுத்து வெகுநேரம்வரைக்கும் தூக்கம் வரவில்லையே, காலமே ஐந்துமணிக்குத்தான் நல்ல தூக்கம் வருகிறதென்று ஒருவேளை

சொல்லுவாய். அதற்கு நான் சொல்லுகிற உத்தரமென்னவெனில்: நீ இவ்வுலகத்தில் எந்தவிஷயத்திலாவது முன்னுக்கு வரவேண்டுமென்று கருதினால், காலமே எழுந்திருக்கிற பழக்கத்தை எப்படியாவது அடையவேண்டும். அதிசீக்கிரம் வெகு உத்தமம். பொன்னோ பொருளோ என்னகொடுத்தாகிலும் இதைப் பெறவேண்டும். சிலர் இதற்கென்று குறித்தநேரத்தில் விழிக்கும்படி சத்திடுகிற கடியாரத்தை வாங்கி வைத்துக்கொள்ளுகிறார்கள். வேறு சிலர் வேலைக்காரனைத் திட்டஞ்செய்கிறார்கள். என்ன உபாயஞ் செய்தாகிலும் நாடோறும் அதிகாலையில் விழித்துக்கொள்ளப் பழகவேண்டும். விழித்தவுடனே திடீரென்று எழுந்து படுக்கையை விட்டு விலகி இருந்துகொள்ளவேண்டும். இல்லையென்றால் மறுபடியும் தூக்கம்வந்து பிடித்துக்கொள்ளும். "நித்திரா சத்துரு," விழித்துக்கொள்.

பலவகை மண்கள், அவற்றின் உற்பத்தி, அவற்றின் இலட்சணங்கள்.

பயிர்கள் முளைப்பதற்கு ஆதாரமானதும், பூமியின் மேல்புறத்தில் சொல்ப ஆழமட்டுமிருப்பதுமாகிய மண்ணானது எப்படி உற்பத்தியாகிறதெனில்: ஜலம், பனி, ஆகாயம் அல்லது காற்று முதலியவற்றாலும், பின்னும் இரசாயன சாஸ்திரத்திற்குரிய பல காரணங்களாலும், பூமியிலுள்ள பலவகைக் கற்பாறைகள் தம் கட்டுப்பாட்டை இழந்துத் தூளாகிப்போகிறதினால்தான் பலவித மண்கள் உற்பத்தியாகின்றன. ஆகையால் மண்கள் அல்லது நிலங்களுக்குள்ள வெவ்வேறான இலட்சணங்கள் அந்நிலங்களுக்கடியிலிருக்கும் (Geological Strata) கற்பாறை அடுக்குகளின் தன்மைக்கும், அந்நிலங்களுக்குச் சமீபத்திலுள்ள பர்வதங்கள் குன்றுகளிலிருக்கும் கற்பாறைகளின் தன்மைக்குந்தக்கபடி பேதப்பட்டிருக்கும்.

மணலாவது, சுண்ணாம்புக்கல்லாவது சேர்ந்த மண்ணானது அதிக கனமுள்ளதாயிருக்கும். பூண்டுகளிலிருந்தும், ஜீவஜெந்துக்களிலிருந்துமுண்டாகிற இந்திரவஸ்துக்கள் நிறைந்த மண்ணானது இலேசானதாயிருக்கும். களிமண்ணும், இந்திரவஸ்துக்கள்

நிறைந்த மண்ணும் ஈரத்தை வெகு சுலபமாய் உறிஞ்சி, அதை விட்டுவிடாமல் பற்றிக்கொண்டிருக்கும். ஆகையால் இவ்வித மண்ணுள்ள நிலங்களில் பயிர்கள் நன்றாயுண்டாகவேண்டுமென்றால், அவற்றில் தங்கியிருக்கும் மிதமிஞ்சின நீர் வடிந்துபோகும்படி ஏற்ற பிரயத்தனங்கள் செய்யவேண்டும். மணலுள்ள நிலங்கள் ஈரத்தை உறிஞ்சிக்கொள்ளுகிறதுமில்லை, தம்மிலுள்ள ஈரத்தை விடாது பற்றிக்கொண்டிருக்கிறதுமில்லை. ஆகையால் மணல்தரைகள் கோடைகாலத்தின் உஷ்ணத்தினால் மிகவும் வறண்டுபோகும்; அவற்றிலுண்டாயிருக்கும் பயிர்கள் தீய்ந்துபோம். மழைகாலங்களிலோ மணல்தரைகளில் பயிர்கள் வெகு செழிப்பாயுண்டாகும். அக்காலங்களில் களிமண் தரைகளிலுள்ள பூண்டுகள் மிதமிஞ்சின ஈரத்தினால் மடிந்துபோவதற்கு ஏதுவுண்டாகும்.

களிமண்ணாவது, இந்திரவஸ்துக்கள் நிறைந்த மண்ணாவது உள்ள நிலமானது அதிக உஷ்ணகாலத்தில் பயிர்களுக்குச் சேதத்தை வருவிக்கும். எப்படியெனில், அவ்வித மண்கள் அதிக உஷ்ணத்தினால் காய்ந்து சுருங்கி இறுகிப்போம். இவ்வாறு மண்ணானது சுருங்கிக் கடினமாவதினால் பூண்டுகளின் வேர்கள் அதிகமாய் நெருக்கப்பட்டுப்போவதுமன்றி, ஆகாயம் உள்ளே பிரவேசிக்க இடமில்லாமல்போகும். இதனால் பயிர்களின் வளர்ச்சிக்கு ஆடங்கமுண்டாகி, அவைகள் மடிந்துபோகும்படி சம்பவிக்கும்.

நிலங்களில் களிமண்ணானது மிதமாயிருக்குமானால், உஷ்ணகாலத்தில் பயிர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும். எப்படியெனில், உஷ்ணகாலத்தில் இராத்திரிகளில் பனிபெய்யும்பொழுது நிலத்திலுள்ள களிமண்ணானது ஈரத்தை விரைவாய் உறிஞ்சிக்கொண்டு அதை விடாது பற்றியிருக்கும். இதனால் பயிர்களுக்குப் பகல் உஷ்ணத்தினாலுண்டாகும் தீமை குறைக்கப்படும்.

பயிர்கள் நன்றாய் விளைந்து பூரணப்படுவதற்கு அவைகளிருக்கும் நிலத்தில் போதுமான அளவு உஷ்ணமிருக்கவேண்டியது அவசியம். அதிக ஈரமான தரைகளிலிருந்து சூரிய உஷ்ணத்தினால் நீராவி இடைவிடாது எழும்பிக்கொண்டிருக்குமாகையால், அத்தரைகள் அதிகக் குளிர்ச்சியுள்ளவைகளாயிருக்கும். எந்த வஸ்துவிலிருந்தாவது உஷ்ணத்தினால் ஆவி எழும்பிக்கொண்டிருக்குமானால், ஆவி வெளியே நீங்கிப் போகப்போக அவ்வஸ்துவிற்குள்ளிருக்கும் உஷ்ணமானது குறைந்துகொண்டேவரும்.

ஆகவே, அது முன்னிலும் அதிகக் குளிர்ச்சியுள்ளதாகும். இது இயற்கைப்பிரமாணம். ஆகையால் பயிர்கள் விளைந்து பூரணப் படுவதற்கு நிலத்தில் அதிக ஈரமிருக்கப்படாது. அப்படியிருக் குமானால், ஈரங்குறையும்பொருட்டு நிலத்தினின்று நீர் வடிந்து போகும்படி செய்யவேண்டியது அவசியம்.

பயிர்கள் நன்றாயுண்டாவதற்கு நிலங்களில் களிமண்ணும் மணலும் சரியான அளவாய்க் கலந்திருப்பது எவ்வளவு அவ சியமான காரியமென்று மேலே கண்ட குறிப்புகளினால் தெளி வாய் அறிந்துகொள்ளலாம். மணலும் களிமண்ணும் ஏற்ற அள வாய்க் கலந்திருக்கும் நிலத்திற்குத்தான் செழிப்புள்ள நிலமென் றுபேர். களிமண்ணும் மணலும் சரியானபிரகாரம் கலந்திருப் பதினால் அவற்றில் ஒன்றினாலுண்டாகும் தீமை மற்றொன்றினால் நீக்கப்படவும், இரண்டினுடைய பிரயோஜனமான குணங்கள் ஒன்றாய்ச் சேரவும் ஏதுவுண்டாகிறது. களிமண், மணல், சுண் ணாம்பு ஆகிய இம்மூன்றும் ஏற்ற அளவாய்ச் சேர்ந்திருக்கும் மண்ணானது மிகவும் செழிப்பானது. எப்படியெனில், இம்மூன்று வித வஸ்துக்களும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கையில் பூண்டுகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஈரம், (Carbonic acid gas) கரி அமில வாயு, (Ammonia) நவசாரவாயு முதலியவற்றை நிலமானது அதிகமாய் உறிஞ்சிக்கொள்ளும்.

மண்ணிலடங்கியிருக்கும் வஸ்துக்களில் அநேகம் பூண்டுக ளுக்கு ஆகாரமாக உறிஞ்சிக்கொள்ளப்படுகிறதுமன்றி, அவை கள் இரசாயன மாறுதல்களை உண்டுபண்ணி, அதனால் பூண்டுக ளின் வளர்ச்சிக்கு அவசியமான அநேக முக்கியமான காரியங் களை நடப்பிக்கின்றன. திருஷ்டாந்தமாக: மண்ணிலுள்ள சுண் ணாம்பானது பூண்டுகளையும் ஜெந்துக்களையும் சேர்ந்த பதார்த்தங் கள் நிலத்தில் சேருகையில், அவற்றைச் சீக்கிரத்தில் கெடும்படி செய்து, அதினால் அவைகள் பயிர்களுக்கு ஏற்ற ஆகாரமாகும்படி செய்கின்றது. மண்ணிலுள்ள தாவரஜெந்துக்களைச் சேர்ந்த இத் திரவஸ்துக்கள், பூண்டுகள் ஆகாயத்தினின்று நவசாரவாயுவையும், கரிஅமிலவாயுவையும் உறிஞ்சிக்கொள்ளும்படி உதவிசெய்கின் றன. இவ்வாறே மண்ணிலுள்ள பலவித வஸ்துக்கள் பலவகை யான இரசாயன மாறுதல்களை உண்டுபண்ணி, பூண்டுகளின் வளர்ச்சிக்கு உதவிசெய்கின்றன.

சமாசாரம்.

ஐரோப்பிய யுத்தம்.—பிரான்ஷியருக்கும் புருஷியருக்குமுள்ள யுத்தம் இன்னம் முடியவில்லை. பிரான்ஷியரின் ராஜதானியாகிய பாரிஸ்நகரத்தை முற்றிக்கைசெய்திருக்கிற புருஷியர் வெகுநாளாய்ப் பயமுறுத்திக்கொண்டு வந்தபடியே, அந்நகரவாசிகளுக்குத் துன்பத்தை உண்டுபண்ணும்பொருட்டுச் சட்டிப்பீரங்கி வெடிகுண்டுகளைப் பிரயோகிக்கச் சில்தினங்களுக்குமுன் ஆரம்பித்தார்கள். ஆகிலும் பிரான்ஷியர் யாவரும் அதிசயிக்கத்தக்க வண்ணமாய் இன்னும் தங்கள் வீரதீரத்தில் சற்றேனும் தளராமல் சத்துருக்களை மிகுந்த தைரியத்தோடு எதிர்த்துநிற்கிறார்கள். சில சமயங்களில் பாரிஸுக்குள்ளிருக்கும் சேனைகள் வெளிப்பட்டுவந்து சத்துருக்களோடு அகோரயுத்தங்கள் செய்கின்றன.

பாரிஸ்நகரத்துத் தபால் ஏற்பாடு.—இந்நகரம் முற்றிக்கைசெய்யப்பட்டதுமுதல் அதற்குள் வசிப்பவர்கள் வெளியிடங்களுக்குப் போய்வர ஏதுவில்லாததினால், சமாசாரப் போக்குவரவிற்குப் பல விநோதமான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஆகாயவாகனங்களாகிய புகைக்கூண்டுகளில் ஆட்கள் ஏறிக்கொண்டு அங்கங்கே போய் சமாசாரங்களையும் கடிதங்களையும் சேர்க்கிறார்கள். ஆனால் இவ்வித ஆகாயவாகனங்கள் காற்றடிக்கும் திசையில் ஓடுமாகையால், வாகனக்காரர் தெரிந்துகொள்ளுந் திசைக்கு அவற்றைத் திருப்புவது வருத்தமானகாரியம். இதுநிமித்தம் ஒருவர் யுக்திசெய்து கழுகு என்னும் பறவைகளை ஆகாயவாகனங்களை இழுத்துக்கொண்டு போகப் பழக்குகிறாராம். இக்கழுகுகள் வண்டிக்குத் திரைபூட்டப்படுவதுபோல, ஆகாயவாகனத்திற்குக் கட்டப்படும். வாகனக்காரன் தன் மனதுக்கு இசையப் பறவைகள் திசைநோக்கிச் செல்லும்படிக்கு, அவன் இறைச்சித்துண்டு ஒன்று ஒரு நெடுங்கோல் நுனியில் கட்டிப் பறவைகளுக்கு முன்னே பிடித்துக்கொள்வான். பறவைகள் இறைச்சியின் வாசனையை மோந்துகொண்டு அதையே நாடிப் பறக்கும். அவைகள் பறக்கப்பறக்க வாகனம் அவைகளைப் பின்செல்லும்.